[31st March 1965

Coral-reefs around Rameswaram islands

* 380 Q.—SRI RAMA. ARANGANNAL: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether it is a fact that the coral-reefs around Rameswaram and Danushkodi islands have been permitted to be cut and converted into lime; and

(b) if so, to whom the work was entrusted to be carried out?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பவளப்பாறையை வெட்டி எடுத்ததின் காரணமாக அண்மையில் தனுஷ்கோடியில் அடித்த புயல் கொஞ்சம் அதிகமாக அடித்தது என்று கருதப்படுவது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினருக்கு, map இருக்கிறது. அதைவேண்டுமானல் காட்டுகிறேன். பவளப் பாறை இருக்கும் இடம் வேறு. புயல் அடித்த இடம் வேறு. கனம் அங்கத்தினருக்குத் தவறான அபிப்பிராயம் இருந்தால் அதை வைத்துக்கொண்டிருப்பது சரி அல்ல. இதைப்பற்றி விசாரணை செய்ததில் பவளப்பாறைக்கும் புயலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

திரு. சா. கணேசன்: பவளப்பாறை என்று அந்தமாதிரியான ஒரு பகுதி இருப்பதனல்தான், தனுஷ்கோடி, ராமேஸ்வரம் தீவுகள் மணற்பாங்காக இருந்தபோதிலும், வன்மையாக வருகின்ற அலைகளைத் தடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது முழுவதும் அகற்றப்படுமானல் மேலும் அரிப்பு ஏற்படும் என்ற கவலை இருக்கிறது. அதைப்பற்றிய நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கவலை தவறான கவலை என்று நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரிப்பு ஏற்படுகின்ற இடம் தீவுக்குக் கிழக்குப் பகுதி. பவளப் பாறை இருக்கும் இடம் மேற்குப் பகுதி. குறிப்பாக கீழக்கரை, வாலிநோக்கம் போன்ற இடங்களில் சிறு சிறு பவளப்பாறைகள் இருக்கின்றன.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்தப் பவளப்பாறை வெட்டி எடுக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். அப்படியானல் இது எந்த இலாக்கா சார்பிலே நடைபெறுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கால்சியம் கார்பனேட் செய்வதற்கான முக்கியமான மூலப்பொருள் வெட்டியெடுக்கப்படுகிறது. அதைச் செய்வதற்கு இந்திய சிமின்ட் கம்பெனி, அதற்கு வேறு ஏதோ பெயர் இருக்கிறது, அந்தக் கம்பெனிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

31st March 1965]

திரு. இராம. அரங்கண்ணல் : அப்படியானல் அப்படி வெட்டி யெடுக்கின்ற தனியார் யார் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் இந்திய சிமின்ட் கம்பெனி என்று சொன்னேன். அவர்கள் வேறு பெயர் வைத்திருக் கிருர்கள்.

Accidents on the Ghat Road, Nilgiri Hills

* 381 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether it is a fact that within a fortnight from 26th December 1964 two accidents have occurred one to a passenger bus and the other a lorry on the Ghat Road, Nilgiri Hills; and

(b) The matter is *sub-judice*.

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Two accidents occurred not within a fotnight but within a month.

(b) The matter is *sub-judice*.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி மலைப்பிரதேசத்தில் அடிக்கடி இந்தவிதமான விபத்துக்கள் ஏற்படக்காரணம் என்னவென்று விசாரணை செய்யப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த விபத்துக்கள் நீலகிரியில் மாத்திரம் அல்ல. நீலகிரியில் அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டது என்று புள்ளி விவரம் காட்டவில்லை. பொதுவாக விபத்துக்கள் ஏற்படுவதற்கு லாரிகள் சம்பந்தப்பட்டவரை அதி வேகமாக ஓட்டுகிருர்கள் என்ற புகார் வருகிறது. அதற்குப் பல இடங்களில் ஜீப் கொடுத்து, திடீர் சோதனை போடும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்குச் சொந்தமான ஊட்டியிலிருந்து திருச்சி செல்லும் பஸ் இந்த மாதிரி விபத்துக்கு உள்ளாகி இருக்கிறது. விசாரணை நடத்தி இந்த விபத்து எதனல் ஏற்பட்டது என்ற காரணம் அறியப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் கோர்ட்டில் இருக்கிறது. சர்க்கார் அந்த டிரைவர் மீது பிராசிகியூஷன் போட்டு இருக்கிறது. அவர்மீது குற்றம் இருக்கிறதா, இல்லையா என்பதைக் கோர்ட்டு விசாரிக்கும்.

திரு. கே. பொன்னையன் : பொதுவாக மலைப்பிராந்தியங்களிலே திருப்பங்களில்தான் இந்த மாதிரி ஆக்ஸிடன்ட் அதிகமாக ஏற்படு கிறது என்று சொல்லப்படுகிறதே, அதனல் சர்க்கார் இந்தமாதிரி திருப்பங்களை இன்னும் அதிகமாக அகலப்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திருப்பங்களில்தான் அதிக மாக ஆக்ஸிடன்ட் ஏற்படுகிறது என்று புள்ளிவிவரங்கள் காட்ட வில்லை. ஆனல் திருப்பங்களில் இடைவெளிகளை எல்லாம் பொதுப்